நாள்.12.02.2026

அசல் வழக்கு எண். 9/2021

பி.வா. சா.1

பெயர். பொன்னப்பன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் டிரஸ்ட் சொத்து அவர்களுடைய சொத்து என கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண் 210 விஸ்தீரணம் 4 ஏக்கர் 86 சென்ட் ஆகும். வாதி தாக்கல் செய்த வழக்குரை விவரத்தை எனது வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். தாவா சொத்து நாங்குநேரி பொன்னம்மாள் நல்லசிவன்பிள்ளை சமாதி குருபூஜை அறக்கட்டளை சொத்து என்றால் சரிதான்.

மேற்படி அறக்கட்டளையிடம் இருந்து 1923 மற்றும் 1925 ல் பதிவு செய்யப்பட்ட குத்தகை ஆவணங்கள் மூலம் வெள்ளையா நாடார் குத்தகை பெற்று அவரது வாரிசுகள் அனுபவத்தில் உள்ளார்கள் என்பது தான் வாதிகளின் வழக்கு என்றால் சரிதான். வாதிகளின் வழக்குக்கு எதிர்வழக்குரை எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எதிர்வழக்குரைக்கு எனது வழக்கறிஞருக்கு யார் விவரம் சொன்னார்கள் என்றால் நான் தான் விவரம் சொன்னேன்.

குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.